**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 254 of 2022

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.முருகன்

Date : 08.08.2025

**குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதிக்கு ரூபாய் 19,60,000/ பணம் கொடுத்தேன். நிலம் கொடுக்க வேண்டும் அல்லது 2 ரூபாய் அதாவது (24 சதவீதம்) வட்டியுடன் பணம் திரும்ப கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். தாவா கிரைய ஒப்பந்தம் கடனுக்காக போடப்பட்டதா என்றால் இல்லை, சொத்திற்காக தான் போடப்பட்டது. தாவா கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க முன்வரவில்லை என்றால் முன் பணத்தை இரட்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 361/2 பின்னர் சாட்சி சர்வே எண் 631/2 என்று சொல்கிறார். அளவு 1 1/2 ஏக்கர். செக்குபந்தி வடக்கு ரோடு, தெற்கு பிரபு நிலம், மேற்கு கோவிந்தன் நிலம், ஓனி பாதைக்கு கிழக்கு, இதன் மத்தியில் நிலம் அமைந்துள்ளது. நான் சொல்லியிருக்கும் செக்குபந்தி தவறானது என்றால் சரியல்ல. சாட்சி தற்போது செக்குபந்தி சரியாக தெரியவில்லை ஆனால் சொத்து அமைந்திருக்கும் இடம் தெரியும் என்று சொல்கிறார்.

2) நான் பிரதிவாதிக்கு பணமே கொடுக்கவில்லை, பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்தமே எழுதி கொடுக்கவில்லை என்பதால் தான் ரூபாய் 19,60,000/ பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும், செக்குபந்தி கூட எனக்கு சரியாக தெரியவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் கால அவகாசம் மூன்று மாதம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போடும் காலத்தில் தாவா சொத்து ஐசிஐசிஐ வங்கியில் அடமானத்தில் இருந்தது என்றால் சரிதான். அடமானத்தில் இருக்கும் சொத்தை கிரைய ஒப்பந்தம் போடுவது தவறு என்றால் சாட்சி நம்பிக்கையின் பேரில் கிரைய ஒப்பந்தம் போட்டதாகவும், பிரதிவாதி வங்கி கடனை நேர்செய்து விட்டு கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக சொன்னார்.

3) சுரேஸ் என்பவரிடம் வாங்கிய கடனை அடைத்து விட்டு, வங்கி கடனையும் செலுத்திவிட்டு எனக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுப்பதாக சொன்னார். சுரேஷ் எனக்கு நண்பர் இல்லை. பிரதிவாதி எனக்கு நண்பர். பிரதிவாதி என்னிடம் மூன்று காசோலை கொடுத்தார். பிரதிவாதியின் மூன்று காசோலைகள் சுரேசிடம் இருந்தது, நான் சுரேசிடம் ரூபாய் 15,00,000/ கொடுத்து விட்டு பிரதிவாதியின் மூன்று காசோலைகளை நான் வாங்கி கொண்டேன். தாவா கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள ரூபாய் 19,60,000/ தொகை தவறானது என்றால் சரியல்ல.

4) பிரதிவாதி எனக்கு எந்த கிரைய ஒப்பந்தமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சுரேஸ் என்பவரிடம்

கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்த வெற்று முத்திரை தாள், வெற்று தாளை வைத்து இந்த கிரைய ஒப்பந்தம் பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு பணமே கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரூபாய் 15லட்சம் பணத்தை சுரேசிடம் கொடுத்து அதற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்ற விவரங்களை நான் கொடுத்த சட்ட அறிவிப்பிலும், தாவாவிலும் சொல்லவிலை என்றால் நான் சொல்லவில்லை.

5) நான் பிரதிவாதியிடம் பணமே கொடுக்கவில்லை என்றாலும், சுரேசிடம் பிரதிவாதி கொடுத்த வெற்று பாண்டுகளை வைத்து மோசடியாக இந்த கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரமே, பணத்தை திரும்ப கொடுக்க வேண்டும் என்ற மாற்று பரிகாரமே எனக்கு கிடைக்க தக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.